—

# இந்திய உயர் ஸ்தானிகராலயம்

# கொழும்பு

************

<u>ஊடக அறிக்கை</u>

## பதில் இந்திய உயர்ஸ்தானிகர் திரு வினோத் கே ஜேக்கப் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அவர்களுடன் சந்திப்பு

இலங்கைக்கான பதில் இந்திய உயர்ஸ்தானிகர் திரு .வினோத் கே ஜேக்கப் அவர்களுக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அவர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று இன்று கொழும்பில் நடைபெற்றது . இந்த சந்திப்பின்போது கொவிட் -19 நோயினை எதிர்கொள்வதற்காக இந்தியா மேற்கொண்டிருக்கும் முயற்சிகள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன அவர்களுக்கு பதில் இந்திய உயர் ஸ்தானிகர் விளக்கமளித்திருந்தார் . இதேவேளை உலகளாவிய ரீதியில் பாதிப்பினை ஏற்படுத்திவரும் இந்நோய்க்கு எதிரான போராட்டத்தில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக கௌரவ அமைச்சர் அவர்கள் பதில் உயர்ஸ்தானிகர் அவர்களுக்கு எடுத்துரைத்திருந்தார்..

கௌரவ அமைச்சர் அவர்களும் பதில் உயர் ஸ்தானிகர் அவர்களும் கொவிட் -19 க்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டங்களில் இருதரப்பிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள் தொடர்பாக தமது மகிழ்ச்சியினை வெளிப்படுத்தியிருந்த அதேநேரம் இவ்விடயம் தொடர்பில் தொடர்ந்தும் இணைந்து செயற்படுவதற்கும் இணங்கியிருந்தனர் . ஒவ்வொரு நாடும் தமது சொந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில் இந்த இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் இந்நோய்க்கு பின்னரான பொருளாதார மீட்சியானது ஒன்றிணைந்த செயற்பாடுகளில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

மார்ச்சில் இந்தியாவிலிருந்து நாடு திரும்ப முடியாமலிருந்த யாத்திரிகர்களை மீண்டும் நாட்டிற்கு அழைத்து வருவதற்கு இந்தியா வழங்கிய ஆதரவுக்காக கௌரவ வெளிவிவகார அமைச்சர் அவர்கள் இந்தியாவுக்கு நன்றியினை தெரிவித்திருந்த அதேநேரம் ஏப்ரல் மாதத்தின் முற்பகுதியில் 13 தொன்களுக்கும் அதிகமான உயிர் காக்கும் மருந்துப்பொருட்களை இந்தியா இலங்கைக்கு வழங்கியமைக்கும் அமைச்சர் அவர்கள் தனது நன்றியினை வெளிப்படுத்தியிருந்தார் . மேலும் இந்தியாவிலிருந்து இலங்கை மாணவர்களை நாட்டுக்கு திரும்ப அழைத்து வருவதற்கான செயற்பாட்டிலும் அவர் இந்தியாவின் ஒத்துழைப்பினை நாடியுள்ளார்.

இருதரப்பு உறவுகள் தொடர்பாகவும் கௌரவ அமைச்சர் அவர்களும் பதில் உயர்ஸ்தானிகர் அவர்களும் கலந்துரையாடியுள்ளதுடன் 2019 நவம்பரில் ஜனாதிபதி கௌரவ கோதாபய ராஜபக்ஷ , 2020 பெப்ரவரியில் பிரதமர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ மற்றும் 2020 ஜனவரியில் வெளிவிவகார அமைச்சர் கௌரவ தினேஷ் குணவர்த்தன ஆகியோர் இந்தியாவுக்கு மேற்கொண்டிருந்த விஜயங்களின்போதான புரிந்துணர்வுகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது.

****************

கொழும்பு

20 ஏப்ரல் 2020